13

உ

நல்லொழுக்கபோத வர்க்கம்

# நீதிக் கதைகள்

## உலக நீதி

டி. எ. எக்குமய்யரால் இயற்றப்பட்டது

Published By

**T. A. Egyamiar**

*Head Master*

NORTH CAR STREET, MUNICIPAL SCHOOL,

**Tinnevelly Town.**

1st EDITION] [1000 COPIES

PRINTED AT THE

**SRI MURUGANANDA PRESS,**

**TINNEVELLY.**

1928

All Rights Reserved

Price As. 2) (Postage Extra.

# பொருள் அடக்கம்

1 மாணிக்கவாசகர் படிப்பால் மந்திரியானது
2 வசிஷ்டர் பிள்ளைகள் கௌசிகரால் சபிக்கப்பட்டது
3 கர்ணன் தாய் குந்தி சொற்படி நடந்தது
4 புரோசனன் வஞ்சகன் துரியோதனனால் அழிந்தது
5 கர்ணன் பரசுராமரிடம் பொய்கூறி கெட்டது
6 துர்வாஸர் துரியோதனன் நட்பால் கெட்டது
7 நாகமன் தன்னைநம்பிய பாண்டியனைக்கெடுத்து கெட்டது
8 பாண்டவர் துரியோதனனை உறவென்று நம்பிகெட்டது
9 கர்ணன் கண்ணனுக்கு தர்மமிட்டு சிறப்புற்றது
10 தர்மர் பகைவன் துரியோதனன் வீடுபோய் கெட்டது
11 பேதைப்பெண் காளமேகப் புலவனைப் பழித்துகெட்டது
12 கீசகன் துரோபதையை இச்சித்து இறந்தது
13 கழாத்தலையார் அரசனை எதிர்த்து அவமானமுற்றது
14 சங்கப்புலவர் திருவள்ளுவரைப் பழித்து தோற்றது
15 தாக்ஷாயணி தக்ஷன் வீடுபோய் வஅமானமுற்றது
16 தக்ஷன் ததீசிமுனிவர் சொற்கேளாது கெட்டது
17 மாரீசன் ராவணனுடன் கூடி அழிந்தது
18 ஏகலைவன் துரோணருக்கு குரு தக்ஷிணை கொடுத்தது
19 தசரதன் வாலிபனைக்கொன்று சாபமடைந்தது
20 உத்தானபாதன் இருமனைவிகளை மணந்து கெட்டது
21 பீஷ்மர் சிகண்டியுடன் சண்டை செய்யாது இறந்தது
22 காளமாமுனிவர் துரியோதனனுடன் கூடி கெட்டது
23 பத்மாசுரன் சிவன்செய்த நன்றியை மறந்து அழிந்த
24 ராவணன் விபூஷணனைப் பழித்து இறந்தது
25 இடைப்பையன் ஒருவன் பொய் சொல்லி கெட்டது
26 துரியோதனன் மைத்திரேயரைப் பழித்து கெட்டது
27 தனபதியின் தாயாதிகள் பொய்வழக்கிட்டு கெட்டது
28 கிரவுஞ்சன் அகஸ்தியரிடம் திறம்பேசி கெட்டது
29 அர்ச்சுனன் ஸ்ரீகிருஷ்ணனை மறந்து தோற்றது
30 தர்மர் யுத்தத்தில் பொய்கூறி வருந்தியது

# உலகநீதிக் கதைகள்.

## 1. ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்
(மாணிக்கவாசகர் படிப்பால் மந்திரியானது)

முற்காலத்தில் மதுரையில் அரிமர்த்தன பாண்டியன் அரசாக்ஷி செய்கையில், அவ்வூருக்கருகிலுள்ள திருவாதவூரில் மாணிக்கவாசகர் என்றோர் அந்தணர் இருந்தார். அவர் மிக்கப் படித்தவரும் ஈச்வரபக்தியுள்ளவருமானவர். அது அறிந்த பாண்டியன் அவரை தனக்கு மந்திரியாக்கிக்கொள்ள, அவரும் தம் கல்வித் திறமையாலும் ஈச்வரகடாக்ஷத்தாலும் ராஜ்யத்தில் செவ்வனே மந்திரி வேலை நடத்தி வந்தார்.

நிற்க ஓர் சமயம் அவ்வூரில் வெள்ளத்தால் குதிரைகள் அனைவும் மாள, அரசன் அவரிடம் நிறம்ப பணம் கொடுத்து குதிரை வாங்கி வரும்படி அயல் நாடு அனுப்பினர். உடன் அவர் அப்படியே அயல் நாடு போகப் பிறப்பட்டு திருப்பந்துறைக்கு வர, தான் வந்த காரியத்தை மறந்து தெய்வ பக்தி மேலிட்டவராய்க் குதிரை வாங்காது பணம் அனைத்தையும் அங்கு சிவாலயத் திருப்பணியில் செலவிட்டு மதுரைக்கு வெறுங்கையாக வந்தனர்.

அப்பொழுது அதுகண்ட அரசன் அவரைக் கோபிக்க, ஈசன் தம் பரிவாரங்களுடன் அங்கு குதிரைகளாக வந்து அவரைக் காத்து அரசனை மகிழ்வித்தனர். அந்தோ! இதில் மாணிக்கவாசகர் மந்திரி பதவி பெற்றதும் ஈசனே தன்னை நேரில் ஆட்கொள்ள பெறுமையுற்றதும் அவர் மிக்க கல்வியறிவு உள்ளவராய் இருந்ததால் அல்லவா. ஆதலால் நாம் ஒருபோதும் படியாமல் இருக்கக்கூடாது.

## 2. ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்
(வஸிஷ்டர் பிள்ளைகளும் கௌசிக ரிஷியும்)

முற்காலத்தில் அயோத்தியில் திரிசங்கு என்றோர் அரசன் இருந்தான். அவன் ஒரு சமயம் சுயதேகத்துடன் மோக்ஷம்போக எண்ணி தன் குரு வஸிஷ்டரைப் பிரார்த்திக்க அவர் அது தன்னால் முடியாது என கூறினர். பின் அவன் அவர் பிள்ளைகளை வேண்ட, அவர்களும் தங்களால் முடியாது எனக்கூறினர். உடன் அவன் மிக்க வருந்தி அவர்களிடம் தான் வேறோர் குருவை அடையப்போவதாகக்கூற, அவர்கள் அவனை நீசனாக சபித்தனர்.

பின் அவன் அவர்களை விட்டு விச்வாமித்திர மகரிஷியை அடைந்து நமஸ்கரித்து நடந்ததைக்கூறி தன்னை மனித உடலுடன் சுவர்க்கம் சேர்ப்பிக்கப் பிரார்த்தித்தனன். உடன் அவரும் அதற்கிணங்கி ஓர் யாகம் தொடங்கி அதற்கு எல்லோரையும் அழைக்க சகலரும் வந்தனர். வஸிஷ்டர் பிள்ளைகள் மாத்திரம் வரவில்லை.

தவிரவும் அவர்கள் "யாகம் செய்பவனாகிய திரிசங்கோ சண்டாளன், அதைச் செய்விப்பவனாகிய குரு விச்வாமித்திரனோ க்ஷத்திரியன், ஆகவே இவர்கள் யாகத்திற்கா நாம போவது" என அவர்களைப் பழித்தனன். அதுகண்ட விச்வாமித்திரர் மிக்க கோபங்கொண்டு அவர்களைச் சாம்பலாய் போக சபிக்க, அவர்களும் அப்படியே ஆயினர். அந்தோ! இதில் வஸிஷ்டர் பிள்ளைகள் சாம்பலானது அவர்கள் விச்வாமித்திரரைக் குறை கூறியதால் அல்லவா. ஆதலால் நாம் ஒருவரையும் ஒருபோதும் குறை கூறக்கூடாது.

## 3. மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்.
### (கர்ணனும் குந்தியும் என்ற கதை)

முற்காலத்தில் அஸ்தினபுரியில் துரியோதனன் என்றோர் அரசன் இருந்தான். ஒரு சமயம் அவனுக்கு அவன் சிற்றப்பன் பிள்ளைகளான பாண்டவர்களுக்கும் ராஜ்யம் பங்கிட்டுக்கொள்வதில் சண்டை ஏற்பட்டன. அப்பொழுது பாண்டவர்களின் சொந்தத் தமயனான கர்ணன் தன் பிறப்பு தெரியாது துரியோதனன் கூடி சேர்ந்திருந்தான்.

அப்பொழுது பாண்டவர்களின் சகாயனான ஸ்ரீ கிருஷ்ணபகவான் தூண்டுதலால் அவர்கள் தாய் குந்தி ஒருவரும் அறியாது கர்ணனிடம் சென்று அவன் பிறப்பைக்கூற, அவனும் அவளே தன் தாய் என நம்பினன். பின் அவள் அவனை துரியோதனனை விட்டு பாண்டவர்களுடன் சேரக்கேட்க, அவன் தான் துரியோதனன் உப்பைத்தின்று வளர்ந்திருப்பதைக்கூறி அதற்குடன்பட மறுத்தனன்.

உடன் குந்தி அவனை பாண்டவர்கள்மேல் விடும் பாணங்கள் எதையும் ஒரு முறைக்குமேல் மறுதரம் விடாதிருக்கக்கேட்க அவனும் அதற்கு அப்படியே இசைந்தனன். பின் அவன் யுத்தத்தில் தன் தாய் வார்த்தையை மறவாமல் பாண்டவர்மேல் ஒரு தரம் விட்ட அம்பை மறுமுறை விடாது தன் வாக்கைக் காத்து போரில் மாண்டு புகழ் பெற்றனன். அந்தோ! இதில் கர்ணன் போரில் மாண்டு புகழ்பெற்றது அவன் தாய் வார்த்தையை மறவாது நடந்துவந்ததால் அல்லவா, ஆதலால் நாம் ஒருபோதும் தாய் சொல்லை மறக்கலாகாது.

## 4 வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்:
(புரோசனன் துரியோதனனுடன் கூடி கெட்டது)

---

முற்காலத்தில் அஸ்தினாபுரியில் துரியோதனன் என்றோர் அரசன் இருந்தான். அவன் தன் தாயாதிகளான பாண்டவர்களைக் கொன்று அவர்கள் ராஜ்யத்தை அபகரிக்க எண்ணி அவர்களை வாரணாவதத்தில் வஸிக்கச் செய்ய தன் பிதா திருதராட்டிரனை வேண்டினன். உடன் அவரும் அதற்கிணங்கி புரோசனன் என்றோர் சிற்பியைக்கொண்டு வாரணாவதத்தில் அரக்கால் சூதான ஓர் மாளிகை கட்டச் செய்தனன்.

பின் திருதராட்டிரன் பாண்டவர்களை அழைத்து வாரணாவதத்தில் துரியோதனன் பகையின்றி சுகமாய் வசிக்கக்கூற, அவர்களும் அதற்கிணங்கி அப்படியே செய்தனர். நிற்க துரியோதனன் புரோசனனை அழைத்து ஓர் இரவைக் குறிப்பிட்டு அன்று நடுநிசியில் அவ்வரக்கு மாளிகையை ஒருவருமறியாது எரித்துவர ஏவினன். அதற்கு புரோசனனும் இசைந்து அப்படியே பாண்டவர்களிடம்போய் அவர்களுக்குப் பணியாளன் போலிருந்து குறித்த இரவை எதிர்பார்த்திருந்தான்.

அப்பொழுது அசனையறிந்த பாண்டவர்களில் ஒருவரான வீமன் அதில் ஓர் சுரங்கவழி செய்து குறித்த இரவில் அதை எரித்துவிட்டு தன் தாயுடனும் சகோதரருடனும் தப்பி ஓட, புரோசனன் மாளிகையினுள் தீயில் அகப்பட்டு இறந்தனன். அந்தோ! இதில் புரோசனன் இறந்தது அவன் மகா வஞ்சகனான துரியோதனனுடன் கூடி இருந்ததால் அல்லவா. ஆதலால் நாம் ஒருபோதும் வஞ்சகர்களுடன் சேரக்கூடாது.

## 5. நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்.
(கர்ணன் பரசுராமரிடம் பொய் சொன்னது)

முற்காலத்தில் பரசுராமர் என்றோர் அந்தணகுரு இருந்தார். அவர் வில்வித்தையில் மிகவும் சிறந்தவர். அவர் பிராமணர் தவிர வேறு எவர்க்கும் வில்வித்தை கற்பிப்பதில்லை என சபதம் கொண்டவர். நிற்க ஒரு சமயம் வளர்ப்பால் கீழ் ஜாதியனும் பிறப்பால் க்ஷத்திரியனுமான கர்ணன் என்றோர் சிறுவன் அவரையணுகி, தான் பிராமணன் என பொய்கூறி அவரிடம் வில் வித்தை கற்று வந்தான்.

ஒரு நாள் அவர் அவன் மடியில் தலைவைத்து நித்திரை செய்ய, ஓர் வண்டு அவன் துடையை பொய் சொன்னதற்சாக பலமாய்க் கடித்து ரத்தம பெருகச் செய்தது. அப்பொழுது அவன் குருவின் நித்திரைக்குப் பங்கம் வராது வலியை சகித்துக்கொள்ள, ரத்தம் குருவின்மேல் பட்டு அவரை நனைத்து தூக்கத்தினின்றும எழுப்பிவிட்டது.

உடன் அவர் எழுந்து அவனது அஞ்சா தீரத்தைக் கண்டு அவன் பிராமணன் அல்ல க்ஷத்திரியன் என்று எண்ணி மிக்க கோபங் கொண்டனர். பின் அவர் அவனை "நீ கற்ற கல்வி அனைத்தும் உனக்கு உதவாது அழியக்கடவது" என சபிக்க, அப்படியே அது பிற்காலத்தில் அவனுக்கு உதவாது போயின. அந்தோ! இதில் கர்ணன் கஷ்டப்பட்டு கற்ற கல்வி அனைத்தையும் இழந்தது, அவன் மனதறிந்து வேண்டுமென்று குருவினிடம் பொய் சொன்னதால் அல்லவா. ஆதலால் நாம் ஒருபோதும் மனமாறப் பொய் சொல்லக்கூடாது சொன்னால் கெடுதியை அடைவோம்

## 6. நல்லிணக்க மில்லாரோ டிணங்க வேண்டாம்

### (துர்வாஸ மகரிஷியும் துரியோதனனும்)

முற்காலத்தில் அஸ்தினாபுரியில் துரியோதனன் என்றோர் கொடுங்கோல் மன்னன் இருந்தான். ஒரு நாள் அவனிடம் அவனது ஆப்த நண்பரான துர்வாஸ மகரிஷி வர, அவன் அவரை மிக்க உபசரித்தனன். அதுகண்ட அவர் மிக்க களிப்புற்று அவனை வேண்டும் வரம் கேட்கக்கூற, அவன் தன் பகைவரான பாண்டவர் களைக் கொன்று உதவிபுரிய வேண்டினன்.

உடன் அவரும் அதற்கிணங்கி தம் பரிவாரங்களுடன் காட்டிற்கேகி பாண்டவர்கள் இருக்குமிடத்தை இரவு பதினைந்து நாழிகை சமயம் கண்டு பிடித்தனர். பின் அவர் அவர்களை பசிக்கு உணவு அளிக்க கேட்க அவர்களும் அதற்கு சம்மதித்து பத்னிதுரோபதைக்கு உத்திரவிட்டனர். அப்பொழுது துரோபதை அக்ஷய பாத்திரம் கவிழ்த்துவிடப்பட்டது பற்றி வருந்தி, ஸ்ரீ கிருஷ்ணபகவானைப் பிரார்த்திக்க, அவர் அவர்கள் அனைவருக்கும் வயிற்றுப் பொறுமல் உண்டாகச்செய்த தோடு அவளது அக்ஷய பாத்திரம் உணவு நிறம்பி இருக்கச் செய்தனர்.

பின் துரோபதை துர்வாஸர் முதலியவர்களை விருந்துண்ண அழைக்க, அவர்கள் வயிற்றுவலி எனக் கூறி உணவுண்ண மறுத்துவிட்டனர். பின் துர்வாஸர் தம் குற்றத்தை உணர்ந்து ஸ்ரீகிருஷ்ண பிரானை வணங்கி, மன்னிப்பு பெற்று வியாதி நீங்கி தம் இருப்பிடம் சென்றார். அந்தோ! இதில் துர்வாஸர் வயிற்றுவலி யால் கஷ்டப்பட்டது, அவர் மகா கெட்டவனான துரியோதனனுடன் சேர்ந்து இருந்ததால் அல்லவா. ஆதலால் நாம் கெட்டவருடன் சேரின் வருந்துவோம்.

## 7. அடுத்தவரை ஒருநாளும் கெடுக்கவேண்டாம்
### (பாண்டியனும் விஜயநகரத்து நாகமனும்)

---

முற்காலத்தில் மதுரையில் சந்திரசேகரன் என்றோர் பாண்டியன் அரசாக்ஷி செய்துவந்தான். ஒருக்கால் அவன்மீது சோழநாட்டரசன் ஒருவன் படையெடுத்துவந்து, அவனை வென்று அவன் நாட்டையும் பிடுங்கிக் கொண்டான். அவன் அதுகண்டு மனம் வருந்தி விஜயநகரத்து அரசனிடம்போய் சரண்புகுந்து சோழனிடமிருந்து தன் நாட்டை மீண்டும் வாங்கித் தரும்படிவேண்ட அவனும் அதற்குடன்பட்டனன்.

பின் விஜயநகரத்தரசன் தன் சேனாபதி நாகமனை யழைத்து சோழனை வென்று பாண்டிய நாட்டை மீண்டும் சந்திரசேகரனிடம் ஒப்புவித்து வரக்கூற, அவனும் அப்படியே மதுரைக்குச் சென்று சோழனை விரட்டினன். ஆனால் அவன் தன் அரசன் சொற்படி ராஜ்யத்தை சந்திரசேகரனிடம் கொடாது அவனைக் கொன்று அதைத் தானே எடுத்துக்கொண்டனன்.

அதுகண்ட விஜயநகரத்தரசன் மிக்க கோபங் கொண்டு நாகமனைச் சிறைபிடித்து வர, அவன் மகன் விச்வநாதனை அனுப்பினன். அவனும் அப்படியே சென்று நாகமனை சிறைபிடித்து வர, அரசன் மிக்கக் களிப்புற்று அந்நாட்டை அவனுக்கே கொடுத்தனன். அந்தோ இதில் நாகமன் சிறைபிடிக்கப்பட்டது, அவன் தன்னை அடுத்தவனான பாண்டியனைக் கெடுத்ததால் அல்லவா. ஆதலால் நாம் நம்மை அண்டினவர்களை ஒரு போதும் கெடுக்கலாகாது.

## 8. மாற்றானை யுறவென்று நம்ப வேண்டாம்
(அர்ச்சுனனும் துரியோதனனும் கந்தர்வனும்)

முற்காலத்தில் அஸ்தினபுரியில் துரியோதனன் என்றோர் கொடிய அரசன் இருந்தான். அவன் ஒரு சமயம் தன் தாயாதிகளான பாண்டவர்களை ராஜ்யத்தைப் பிடுங்கிக்கொண்டு காட்டுக்குத் துரத்திவிட்டான். ஆகவே அவர்களும் மிக்க பொறுமையுடன் காட்டிற் கேகி ஊண் உறக்கமின்றி வசித்து வந்தனர்.

அப்பொழுது ஒரு சமயம் துரியோதனன் அவர்களைக் கண்டு எள்ளனம் செய்ய எண்ணி, காட்டிற்குப் பிறப்பட்டான். வழியில் அவன் துவைத பால வனத்தில் சிறிது இளைப்பாற இறங்க, அவ்வனத்திற்குடையவனான தேவலோகத்துச் சித்திராங்கதன் என்னும் கந்தர்வன் அவனை அங்கிருக்கக் கூடாது என விரட்டினன்.

உடன் அவ்விருவருக்கும் கலகம் எற்பட கந்தர்வன் துரியோதனனைக் கட்டி தேவலோகம் கொண்டு போயினன். அப்பொழுது அவன் அலற அதுகேட்ட அடுத்த வனத்தில் இருந்த பாண்டவர்களில் மூத்தவரான தர்மர் துரியோதனனை மீட்டி விட, தம்பி அர்ச்சுனனை எவினர். உடன் அவனும் அப்படியே செய்ய, துரியோதனன் அதற்குப் பாண்டவர்களிடம் சிறிதும் நன்றிகொள்ளாது அவர்களைப் பின்னும் அதிகமாக வருத்தத் துடங்கினன். அந்தோ இதில் பாண்டவர்கள் பின்னும் அவதிப்பட்டது அவர்கள் துரியோதனனை பகைவனென கருதாததால் அல்லவா. ஆதலால் நாம் ஒருபோதும் பகைவனை உறவென்று நம்பக் கூடாது.

## 9. தர்மத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்.

(கர்ணனும் கிருஷ்ணபகவானும்)

முற்காலத்தில் அஸ்தினபுரியில் இருந்த துரியோதனாதிகளும் பாண்டவர்களும் ராஜியம் பங்கிட்டுக் கொள்வதில் வழக்குண்டாகி பெரும் போர் புரிந்தனர். அப்பொழுது மகாதர்மிஷ்டனும் சிறந்த வீரனுமான கர்ணன் என்பான் ஒருவன் துரியோதனன்பால் நின்று பாண்டவர்களை எதிர்க்க உடன் பாண்டவர்களில் ஒருவனான அர்ச்சுனனும் அவனை மடக்கித் தோற்கடித்தனன்.

எனினும் அச்சமயம் அர்ச்சுனன் கர்ணனை அவன் செய்துள்ள தர்மத்தின் பெருமையால் கொல்ல முடியாது வருந்தினன். அப்பொழுது அதுகண்ட அவனது சகாயரான ஸ்ரீ கிருஷ்ணபகவான் கர்ணனை அணுகி தர்மம்கேட்க, அதற்கு அவன் அச்சமயம் தன்னிடம் ஒன்றும் இல்லாததுபற்றி மிக்க வருந்தினன். அதறிந்த பகவான் அவனை அதுவரை அவன் செய்துள்ள தர்மத்தின் பலனைத்தர வேண்டினர்.

உடன் கர்ணன் அதற்குச் சிறிதும் தயங்காது அப்படியே செய்ய, அவன் பலமிழந்து மரித்து எல்லோராலும் புகழப்பட, வீர சொர்க்கம் சேர்ந்தான். அந்தோ இதில் கர்ணன் யுத்தத்தில் நெடுநாள் தோற்றும் மடியாததும், பின் அவன் மடிந்து சுவர்க்கம் சேர்ந்ததும் அவன் சாகும் தருணத்திலும் தர்மத்தை மறவாது இருந்ததால் அல்லவா. ஆதலால் நாம் ஒரு போதும் தர்மத்தை மறக்கக் கூடாது.

## 10. சினத்திருந்தார் வாசல் வழி சேரவேண்டாம்.

### (தர்மர் துரியோதனன் வீடுபோய் சூதாடியது)

---

முற்காலத்தில் அஸ்தினபுரியில் துரியோதனன் என்றோர் அரசன் இருந்தான். அவன் தன் சிற்றப்பன் பிள்ளைகளான பாண்டவர்களுக்கு ராஜ்யத்தில் பங்கு கொடாது ஒழிக்க பல சூழ்ச்சிகள் செய்தனன். அதில் அவன் ஒருசமயம் அவர்கள் உரிமையைப் பெற எண்ணி அவர்களை இந்திரப்பிரஸ்தத்தில் இருந்து அஸ்தினபுரிக்கு ஓர் விருந்துக்கு அழைப்பதுபோல் மிக்க உபசரித்துக் கூப்பிட்டனன்.

அதற்குப் பாண்டவர்களும் அவன் தன் பகைவனாயிற்றே எனச்சிறிதும் கருதாது, சகோதரன் என்றெண்ணி தம் பத்னி துரோபதையுடன் சென்றனர். பின் விருந்துமுடிந்ததும் துரியோதனன் பாண்டவர்களில் மூத்தவரான தர்மரை சூதாட அழைக்க, அவரும் அதற்கு இசைந்தனர். உடன் துரியோதனன் வஞ்சகமாய் சூதாடி அவரை ஏமாற்றி அவர் நாட்டையும் மனைவியையும் தம்பிகளையும் பந்தயம் வைக்கச் சொல்லி பிடுங்கிக்கொண்டனன்.

அதுகண்ட பீஷ்மர் விதுரர் முதலிய பெரியோர் துரியோதனனைக் கோபிக்க, அவன் பதின்மூன்று வருடம் வனவாஸம் செய்துவந்தால் ராஜ்யம் தருவதாய்க் கூறி பாண்டவர்களை வனத்திற்கு அனுப்பிவிட்டனன். அந்தோ இதில் தர்மர் நாடுஇழந்து காடு அடைந்தது, அவர் பகைவன் துரியோதனன் வீடுபோய் சூதாடியதால் அல்லவா. ஆதலால் நாம் ஒருபோதும் நம்மிடம் கோபித்திருப்பவர் வீட்டிற்குப் போகலாகாது.

## 11. கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்.

(பேதைப்பெண் காளமேகத்தைப் பழித்தது)

---

முற்காலத்தில் திருவானைக்காவலில் காளமேகம் என்றோர் அந்தண வித்துவான் இருந்தார், அவர் வர கவி பாடுவதிலும் வசைபாடுவதிலும் உலகில் மிக்கபுகழ் பெற்றவர். அவர்தன் யாத்திரையில் ஒரு சமயம் ஓர் ஊரில் வீதி வழியாய்ச் செல்கையில் அங்கு வீடு களில் வாசல் தூத்துக்கொண்டிருந்த ஸ்த்ரீகளில் ஒருத்தி இன்னொருவளை நோக்கி அம்மா இவர்தானு காளமேகப் புலவர் எனக் கேட்டாள்.

அதற்கு அவள் மிக்க கர்வமாயும் விளையாட்டுத் தனமாயும் ஆம் இதுதான் காள்மேகம் என்ற கட்டை வாரில் எனப் பதில் கூறினள். அது கேட்ட புலவா வருந்தமுற்று அவளுக்கு அதற்கு புத்தியுண்டாக்க எண்ணி, அம்மா அது பெருக்கப் பெருக்கத் தெரியும் எனக் கூற, அப்பெண் அப்படியே நிமிர முடியாமல் தெருக் கூட்டியபடியே கூனி இருக்கலாயினள்.

பின் அவள் தன் குற்றத்தை உணர்ந்து தன்னை மன்னிக்க அவரை வேண்ட, அவரும் அவளுக்கிரங்கி ஓர் பாட்டால் அவளை மன்னித்து முன்போல் சரியான சரீரமுடையவளாகச் செய்தனர். அந்தோ இதில் பேதைப்பெண் மகாபண்டிதரான காளமேகப் புலவ ரைப் பழித்ததால் அல்லவா, அவரால் கூனியாகச் சபிக்கப்பட்டனள். ஆதலால் நாம் ஒருபோதும் படித்தவர்களைப் பழிக்கக் கூடாது.

## 12. கற்புடைய மங்கையரைக் கருதவேண்டாம்.
### (கீசகன் துரோபதையை இச்சித்தது)

முற்காலத்தில் அஸ்தினாபுரியில் துரியோதனன் என்றோர் அரசன் இருந்தான். அவன் ஒரு சமயம் தன் தாயாதியான பாண்டவர்களுடன் சூதாடி வென்று அவர்களை பன்னீரண்டாண்டு வனவாஸமும் ஓராண்டு அஞ்ஞாத வாஸமும் செய்துவரக் காட்டிற்குத் துரத்தி விட்டனன். அப்பொழுது அவர்களும் அப்படியே மிக்க பொறுமையுடன் காட்டிற்சேகி வனவாஸம் கழித்து விட்டு அஞ்ஞாத விாஸம் கழிக்க விராட நகரம் வந்தனர்.

பின் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு வேடம் கொண்டும் பெயர் பூண்டும் தொழில் செய்தும் அவ்வூர் விராட ராஜன் அரண்மனையில் வசித்தனர். அதாவது அவர்கள் முறையே கங்குபட்டர், பலாயினர் பிருகுநள்ளி, தாமக்கிரந்தி, தந்திர பாலன் எனப்பெயர் பூண்டு புரோகிதம், சுயம்பாகி, பாடகன், குதிரைப் பாகன், ஆடுமேய்ப்பவன், தாதி முதலிய வேலைகள் செய்து வந்தனர்.

அங்ஙனம் அவர்கள் அங்கு வசிக்கையில் விராடனது மைத்துனன் கீசகன் என்றோர் துஷ்டன் துரோபதையை இச்சித்தனன். அப்பொழுது அதறிந்த வீமன் துரோபதையை அவனுக்குடன் படுவதுபோல் நடித்து, அவனை தன் இருப்பிடம் ஓர் இரவில் கூட்டிவரச்சொல்லி, கொன்று விட்டனன். அந்தோ இதில் கீசகன் இறந்தது, அவன் உத்தமி துரோபதையை இச்சித்ததால் அல்லவா. ஆதலால் நாம் ஒரு போதும் உத்தமிகளை இச்சிக்கலாகாது.

## 13. கொற்றவனோ டெதிர்மாறு பேசவேண்டாம்.

(கழாத்தலையாரும் அரையம் அரசனும்)

முற்காலத்தில் சோழநாட்டில் பொன் ரத்னம் முதலியன உள்ள சுரங்கங்களும் மான் யானை முதலிய மிருகங்கள் நிறைந்ததான மிழலை என்றோர் கூற்றம் இருந்தது. அதிலிருந்த அரையம் என்னும் நகரத்தில் ஒரு சமயம் அரசு என்றோர் சிற்றரசன் இருந்தான். அவன் சிறிதும் கல்வி அறிவு இல்லாதவனும், பெரியாரைப் பேணும் நற்சுபாவம் இல்லாதவனுமான துஷ்டன். ஆகவே அவன் பகைவரின்றி நாடு களிக்க நகரத்தை ஆண்டுவந்தனன்.

நிற்க ஒரு சமயம் கழாத்தலையார் என்றோர் புலவர் அவனது துர்க்குணங்களைக் கண்டு வருந்தி அவனை அணுகி "அரசே நீ அறநெறியைக் கைபற்றி ஆட்சிபுரிவதற்குப் பதில் கொடுங்கோன் மன்னனா யிருந்து நாடு ஆளுகின்றாய், அது உனக்கு தீங்கே அல்லாது நன்மை யல்ல ஆதலால் அதனை விடுக" என அவனை எதிர்த்து அவனுக்குப் புத்தி கூறினன்.

அதுகேட்ட அவ்வரசன் மிக்க கோபங்கொண்டு அவரை நோக்கி ராஜாதி ராஜனான எனக்கோ மஹா அற்ப புலவன் நீ புத்தி புகட்டுவது உனக்கேன் இவ்வளவு துணிபு, எனப் பலவாறு இகழ்ந்து கூறி, அவரை நகருக்கு வெளியே தள்ளிவிட்டனன். அந்தோ இதில் கழாத்தலையார் அரை அரசனிடம் அவமானமுற்றது, அவர் அவனை எதிர்த்ததால் அல்லவா. ஆதலால் நாம் ஒருபோதும் அரசனை எதிர்த்துப் பேசக் கூடாது.

## 14. தாழ்ந்தவரைப் பொல்லாங்கு சொல்லவேண்டாம்

### (திருவள்ளுவரும் சங்கப் புலவர்களும்)

முற்காலத்தில் மைலாபூரில் வள்ளுவர் என்றோர் மகான் இருந்தார். அவர் நீசஸ்திரீக்குப் பிறந்து சிறு வயதில் பெற்றோரை இழந்து வள்ளுவச் சேரியில் வளர்ந்தார். அவ்வூரார் அவரைவளர்க்கும் பெற்றோரை நீசக் குழந்தையை வளக்கிறார்களே என அவதூறு பேசினர். அதுகண்ட வள்ளுவர் உடன் அவர்களை விட்டுப்பிரிந்து அருகிலிருந்த ஓர் வனத்திற்கேகி ஈசனை நோக்கித் தவம் செய்ய அவர் அவருக்கிரங்கி அவரை ஓர் தெய்வப் புலவராகச் செய்தனர்.

உடன் வள்ளுவர் பாமரர்களை நல்வழிப்படுத்த எண்ணி திருக்குறள் என்றோர் பாவை இயற்றினர். பின் அவர் அதை எல்லோரும் ஒப்ப மதுரையில் உள்ள தெய்வத் தன்மையுற்ற தமிழ்ச் சங்கத்தில் அரங்கேற்ற எண்ணி மதுரையை அடைந்து விபரத்தை சங்கப் புலவர்களுக்குத் தெரிவித்தனர்.

அதுகேட்ட அச்சங்கப்புலவர்கள் அவரை ஈன ஜாதியர் எனக்கருதி பலவாறு இழித்துக்கூறி முதலில் அவர் பாவை ஏற்கமறுக்க ஈசன் அதை வரவேற்க அவர்களுக்கு அருளினர். உடன் அவர்கள் அப்படியே செய்ய அது அவர்களின் பாக்களினும் சிறப்புற்று விளங்க, அவர்கள் வெட்கி வள்ளுவரைப்போற்றினர். அந்தோ இதில் சங்கப்புலவர்கள் வள்ளுவரிடம் தோற்றது அவர்கள் அவரைத்தாழ்ந்தவர் என்றெண்ணி குறை கூறியதால் அல்லவா. ஆதலால் நாம் ஒரு போதும் தாழ்ந்தவரைக் குறைகூறக்கூடாது.

## 15. மதியாதார் தலைவாசல் மிதிக்க வேண்டாம்
### (தாக்ஷாயணியும் தக்ஷனும்)

---

முற்காலத்தில் தக்ஷபுரியில் தக்ஷன் என்றோர் அரசன் இருந்தான். அவன் தன் பிதா பிரம்மதேவர் சொற்படி சாக்ஷாத் சிவபெருமானை நோக்கி தவம் செய்து ஒருவராலும் வெல்லமுடியாத வரமும், ஈச்வரனே மருமகனாகும் பாக்கியமும் பெற்றவன். அவனுக்குப் பல புத்திரிகள் உண்டு, அதில் சதி எனப்படும் தாக்ஷாயணி ஒரு மகள். அவன் தன் வரப்படி சதி பெரியவளானதும் சாக்ஷாத் சிவபெருமானுக்கு மணம் புரிவித்தான்.

பின் நாள் செல்லச் செல்ல அவன் சாக்ஷாத் பரம் பொருளும் மருமகனும் தனக்கு சகல பாக்கியத்தையும் அளித்தவருமான பரமசிவனிடம் பகைமை கொண்டு அவரை அவமானம் செய்யக்கருதி ஓர் யாகம் செய்தான். பின் அவன் அதற்கு தன் மகள் சதியையும் மருமகன் பரமசிவனையும் அழையாது, எல்லோரையும் அழைத்தனன். நிற்க சதி அதனைப் பொருட்படுத்தாது, போகவேண்டாம் என்ற புருஷனை சமாதானம் செய்துவிட்டு, தான் மாத்திரம் அந்த யாகத்திற்கு போக, தக்ஷன் அவளை மதியாது அவமானம்செய்தான்.

உடன் சதி வெட்கி திரும்பி ஈசனிடம் போகாது அந்த வேள்வி அக்னியிலே விழுந்து இறக்க, ஈசன் அதறிந்து மகா கோபங்கொண்டு அங்கிருந்த எல்லோரையும் கொன்றனர். அந்தோ! இதில் சதி அவமானமுற்று இறந்தது, அவள் தன்னை மதியாத தக்ஷன் வீட்டிற்கு சென்றதால் அல்லவா. ஆதலால் நாம் ஒரு போதும் நம்மை மதியாதவர் வீட்டுக்கு போகலாகாது.

## மூத்தோர் சொல் வார்த்தைதனை மறக்கவேண்டாம்
### (தக்ஷனும் ததீசி முனிவரும்)

முன் காலத்தில் தக்ஷபுரியில் தக்ஷன் என்ருேர் அரசன் இருந்தான். அவன் தனக்கு சகல சம்பத்துக்களையும் அருளிய சாக்ஷாத் சிவபெருமானை மறந்து, அவரை விரோதித்து அடிக்கடி நிந்தித்து வந்தனன். அதில் அவன் ஒரு சமயம் கங்காநதிக்கரையில் கனசலம் என்ற விடத்தில் ஈச்வரனை அழையாமலும் அவருக்கு அவிர் பாகம் கொடாமலும் அவமானம் செய்ய மற்ற எல்லோரையும் அழைத்தனன்.

அப்பொழுது அங்குவந்த ததீசி முனிவர் அதனையறிந்து மனம் வருந்தி ஈச்வரனை அந்த வேள்விக்கு அழைக்கவேண்டும் என்றும், அவருக்கே அதன் அவிர் பாகத்தைக் கொடுக்க வேண்டுமென்றும் அவனுக்குப் புத்தி கூறினர். அதற்கவன் அதனைச் சிறிதும் செவி சாற்ருது மீண்டும் ஈச்வரனை சபையில் பலவாறு அதிகமாகத் தூற்றினன்.

உடன் அம்முனிவர் மிக்க கோபங்கொண்டு அவனும் அவன் யாகமும் அவனுக்குச் சகாயமாயுள்ளவர்களும் சீக்கிரம் அழியக்கடவது என சபித்துச்சென்றனர். ஆகவே சற்று நேரத்திற்கு எல்லாம் அப்படியே தக்ஷனும் அவனைச்சார்ந்தவர்களும் ஈச்வரனுல் அழிக்கப்பட்டனர். அந்தோ இதில் தக்ஷன் சாபமுற்று அழிந்தது அவன் மகாபெரியவரான ததீசி முனிவரது சற்புத்திகளைக் கேட்காததால் அல்லவா. ஆதலால் நாம் ஒருபோதும் பெரியோர் வார்த்தையை மறக்கலாகாது

## 17. முன் கோபக் காரரோ டிணங்கவேண்டாம்
### (மாரீசனும் இராவணனும்)

---

முற்காலத்தில் லங்கையில் ராவணன் என்றோர் இராக்ஷஸ அரசன் இருந்தான். அவன் மிக்க கல்வி யறிவு உடையவனும் ஈச்வர வரப்பிரசாதியு மானவன். ஆனால் மகாகொடியோனும் ஸ்திரீ பிராந்தனும் நீதி இல்லாதவனுமானவன். அவன் ஒரு சமயம் காட்டில் பஞ்சவடியில் ஸ்ரீராம லக்ஷ்மணருடன் வஸித்த சீதா பிராட்டியாரின் பேரழகைப் பற்றி தங்கை சூர்ப்பனகை மூலம் கேள்வியுற்று அவளை அடைய எண்ணினன்.

உடன் அவன் தன் ஆப்த நண்பனுன மாரீசனை அழைத்து மான்வேடம் பூண்டு பஞ்சவடிக்குப் போய் ராமலக்ஷ்மணரைவிட்டு சீதையைப் பிரிக்கக் கூறினன். அதுகேட்ட மாரீசன் இயல்பில் நல்லவனுதலாலும் முன்னொருமுறை விச்வாமித்திரர் யாகத்தில் ஸ்ரீராம லக்ஷ்மணரிடம் உதைபட்டவனுனதாலும் அவர்களது குணநிசயங்களை நன்கு அறிந்தவனுதலாலும் அதற்கு இசையாது மறுத்தனன்.

உடன் ராவணன் மகாகோபங்கொண்டு மாரீசனைக் கொல்லப்போக, அவன் நடுநடுங்கி அப்படியேசென்று ஸ்ரீராம லக்ஷ்மணர்களை சீதையிடமிருந்து பிரித்து அவர்கள் கையால் இறந்தனன். அந்தோ இதில் மாரீசன் நல்லவனுக இருந்தும் இறந்தது, அவன் அதி முற்கோபியான ராவணனுடன் சிநேகமாயிருந்த தால் அல்லவா. ஆதலால் நாம் ஒரு போதும் முற் கோபிகளுடன் சேரக்கூடாது.

## 18. வாத்தியார் கூலியை வைத்திருக்க வேண்டாம்
## (ஏகலைவனும் துரோணுசாரியாரும்)

முற்காலத்தில் அஸ்தினபுரியிலிருந்த ராஜகுமாரர்களுக்கு துரோணர் என்றோர் குரு வில்வித்தை கற்பித்து வந்தார். அக்காலத்தில் ஒரு நாள் அவ்வூருக்கு அருகிலுள்ள வனத்தில் வசித்த ஏகலைவன் என்றோர் வேடப்பையன் அவரையணுகி தனக்கு வில் வித்தை கற்பிக்கவேண்ட, அவர் அதற்குத் தனக்கு அவகாசமில்லை எனக்கூறினர்.

உடன் அவன் மனம் வருந்தி தன் இருப்பிடம் சென்று அவரைப்போல ஓர் உருவம் மண்ணால் செய்து வைத்துக்கொண்டான். பின் அவன் தினம் அதன் முன் வில்லும் கையுமாக நின்று, அவர் தனக்கு நேரில் கல்வி கற்பிப்பதுபோல் மனதில் எண்ணி வில்வித்தை பழகிவந்தான். அப்பொழுது சில நாட்களில் அவனுக்கு துரோணர் அஸ்தினபுரி ராஜகுமாரர்களுக்கு கற்பிக்கும் கல்வி அனைவும் தெரியலாயின.

பின் அவன் துரோணரை அணுகி வணங்கி தான் வில்வித்தை கற்ற விபரம் முழுமையும் தெரிவித்து அவருக்கு வேண்டும் குரு தக்ஷிணை யாது என வினவினன். அதுகேட்ட அவர் அவனைப் பரீக்ஷிக்க எண்ணி அவனது வலது கைப்பெருவிரலைக் கேட்க, அவன் அதற்குச் சிறிதும் தயங்காது அப்படியே கொடுக்க எல்லோராலும் புகழப்பட்டான். அந்தோ! இதில் ஏகலைவன் புகழ்பெற்றது, அவன் குருவுக்கு தக்ஷிணை கொடுத்தபடியால் அல்லவா. ஆதலால் நாம் நமது குருவின் தக்ஷிணையை கொடாது வைத்திருக்கக் கூடாது.

## 19. கருதாமல் கருமங்கள் முடிக்க வேண்டாம்
### (தசரதனும் பிராமண வாலிபனும்)

முற்காலத்தில் அயோத்தியில் தசரதன் என்ருேர் அரசன் இருந்தான். அவன் ஒரு சமயம் காட்டில் வேட்டையாடிக் களைத்து, அங்கிருந்த ஓர் தடாகக் கரையில் உட்கார்ந்திருந்தான். அச்சமயம் ஓர் பிராமண வாலிபன் தன் வயது சென்ற பெற்ருேரை சுமந்து காசியாத்திரையானுன். வழியில் அவன் அவர்களை காட்டில் ஓர் இடத்தில் இறக்கி வைத்துவிட்டு அக் குளத்திற்கு வந்து, அவர்களுக்கு தாகத்திற்கு ஓர் வாயொடுங்கிய ஜாடியில் ஜலம் எடுக்க, அது குடகுட என சப்தித்தது.

அது கேட்ட தசரதன் அதனை இன்னதென நன்கு யோஜித்தறியாது யானை நீரருந்தும் சப்தம் என்றெண்ணி, இருந்த இடத்திலிருந்தே சப்தம் வந்த இடத்தைப் பார்த்து ஓர் அம்பு விட்டான். உடன் அது அப்பிராமண வாலிபன் விலாவில் பாய்ந்து அவன் இரக்க, அவன் சாகுந்தருவாயில் விரும்பியபடி தசரதன் அவன் பெற்ருேருக்கு ஜலம் கொடுக்கப் போயினன்.

அப்பொழுது அவ்வாலிபனின் பெற்ருேர் தம் பிள்ளை இறந்ததை அறிந்து ஆராத்துயருற்று தசரதனை நீயும் உன் பிள்ளையின் பிரிவால் சாவாய் என சபித்து உயிரைவிட, அவனும் சிறிது காலத்தில் அப்படியே இறந்தனன். அந்தோ! இதில் தசரதன் தன் பிள்ளையின் பிரிவால் இறந்தது, அவன் காட்டில் யோஜியாமல் பிராமண வாலிபனைக் கொன்றதால் அல்லவா. ஆதலால் நாம் எதையும் ஒருபோதும் யோஜியாமல் செய்யக்கூடாது.

## 20. இருதாரம் ஒருநாளும் தேட வேண்டாம்
### (உத்தானபாத ராஜன் கதை)

முற்காலத்தில் பரத நாட்டில் உத்தானபாதன் என்றோர் அரசன் இருந்தான். அவனுக்கு சுநீதி சுருசி என இருமனைவியர் உண்டு. நிற்க ஒருக்கால் உத்தான பாதன் மூத்தவளினும் இளைய மனைவியிடம் பிரியம் அதிகம் வைக்க, அவள் அவனுக்கு துர் போதனை போதித்து மகாஉத்தமியான சுநீதியையும் அவள் பிள்ளை துருவனையும் வேறாயிருக்கச் செய்து விட்டனள்.

பின்னொரு நாள் ஐந்து வயதுள்ள துருவன் தற்செயலாய் தன் தகப்பன் அரண்மனைக்குச் செல்ல, அங்கு சுருதியின் பிள்ளை உத்தமன் தகப்பன் மடியில் இருக்கக்கண்டு தானும் அதில் உட்காரப் போனான். அப்பொழுது அங்கிருந்த சுருதி நீ என் வயிற்றில் பிறந்து ராஜசுகம் பெறும் பாக்கியம் அடைய வில்லை எனக் கூறி அவனை அப்பால் இழுத்துத் தள்ளி விட்டனள்.

அது கேட்ட குழந்தை துருவன் மனம் வருந்தி உலகாசையை வெறுத்து காட்டிற்கேகி, சாக்ஷாத் பகவானைநோக்கி கடுந்தவம்செய்ய பகவான் அவனுக்கு மோக்ஷ சாம்பிராஜ்யம் கொடுத்தனர். அந்தோ இதில் உத்தானபாத ராஜன் மகா உத்தமர்களான பத்தினி சுநீதியையும் புத்திரன் துருவனையும் விட்டுப்பிரிந்தது, அவன் இரு தாரங் கொண்டதால் அல்லவா. ஆதலால் நாம் ஒரு போதும் இரு தாரம் கொள்ளலாகாது.

## 21. எளியாரை எதிரிட்டுக் கொள்ள வேண்டாம் (பீஷ்மரும் சிகண்டி ராஜனும்)

முற்காலத்தில் அஸ்தினபுரியில் அரசாக்ஷி செய்த திருதராட்டிரன் பிள்ளைகளான துரியோதனாதிகளுக்கும் அவர் தம்பி பாண்டுவின் மக்களான பஞ்சபாண்டவர்களுக்கும் ராஜ்யம் பங்கு செய்வதில் ஒரு சமயம் போர் நேர்ந்தது. அப்பொழுது அவர்களின் பாட்டனை பீஷ்மாச்சாரியார் துரியோதனன் அன்னம் புசித்துவந்தமைபற்றி அவன் பக்கம் நின்று பாண்டவர்களுடன் போர் புரிந்தனர்.

அப்பொழுது பாண்டவர்களில் ஒருவனை அர்ச்சுனன் அவருடன் எதிர்த்து சண்டை செய்து ஜெயிக்க முடியாமல் வருந்தினன், உடன் சாக்ஷாத் ஸ்ரீ கிருஷ்ண பகவான் அதனை அறிந்து அவனிடம் அலியான சிகண்டியை அவருக்கு எதிரியாக நிறுத்த ஓர் உபாயம் கூறினர். அது கேட்ட அர்ச்சுனனும் அப்படியே செய்து அவனுக்கு உதவியாக அவன் பின்னல் யுத்த சன்னத்தனாய் நின்றனன்.

அதுகண்ட பீஷ்மர் ஐயோ நாம் மிக்க பராக்ரம சாலியாக விருந்தும் பாவம் இந்த அலியான சிகண்டியுடனு யுத்தம்செய்வது என்றெண்ணி போரை நிறுத்தி சும்மா நிற்க, உடன் அர்ச்சுனன் அவரை ஓர் பாணத்தால் அடித்துக்கொன்றனன். அந்தோ இதில் அதிவீரரான பீஷ்மர் தம் உயிரையும் கருதாது போரை நிறுத்தியது, சிகண்டி ஏழை என்றெண்ணி அல்லவா. ஆதாலால் நாம் ஒருபோதும் எளியவரை எதிரியாகக் கொள்ளக் கூடாது.

## 22. சேராதவிடந்தனிலே சேர வேண்டாம்
### (காளமாமுனிவரும் துரியோதனனும்)

முற்காலத்தில் அஸ்தினபுரியில் துரியோதனன் என்றோர் அரசன் அரசாக்ஷிசெய்துவந்தான். அவனுக்குக் காளமாமுனிவர் என்றோர் நண்பர் இருந்தார். அவன் ஒரு சமயம் அவரை தன் பகைவரான பாண்டவர்களைக்கொல்ல வேண்டினன். உடன் அவர் அதற்கு இசைந்து ஓர் யாகம் செய்து அதிலிருந்து ஓர் பூதத்தை தருவித்து அதை பாண்டவர்களைக் கொன்றுவரும்படி ஏவ, அதுவும் அதற்குச் சம்மதித்து பாண்டவர்களைத் தேடி காட்டிற்குச் சென்றது.

அப்பொழுது அதறிந்த பாண்டவர் சகாயனான ஸ்ரீகிருஷ்ண பகவான் அவர்களைக் கார்க்க காட்டில் ஓர் நச்சுப்பொய்கையை உண்டு பண்ணி, அதில் அவர்களை நீர் அருந்தி இறக்கச்செய்தனர். பின் அப்பூதம் காட்டில் நெடுக அலைந்துதிரிந்து பாண்டவர்களை எங்கும் காணாமல் களைப்புற்று கடைசியில் நச்சுப்பொய்கை அண்டை அவர்களைக் கண்டது.

உடன் அது அவர்களை விழுங்கப்போக அவர்கள் பிணமாயிப்பதைக்கண்டு மிக்கக் கோபங்கொண்டு அவர்களை தொடாது மீண்டும் முனிவரையடைந்தது. பின் அது அவரை என்னை பிணம் தின்னவா அனுப்பினை எனக்கூறி ஓரே விழுங்காய் பக்ஷித்து விட்டது. அந்தோ! இதில் காளமாமுனிவர் ஞானியாயிருந்தும் அவர் மாண்டது, மகா கெட்டவனான துரியோதனனுடன் சிநேகமாயிருந்ததால் அல்லவா. ஆதலால் நாம் ஒருபோதும் சேரத்தகாதவர்களுடன் சேரக் கூடாது.

## 23. செய்த நன்றி ஒருநாளும் மறக்கவேண்டாம்
(பத்மாசுரனும் சிவபெருமானும்)

முற்காலத்தில் பத்மன் என்றோர் அசுரன் இருந்தான். அவன் ஒருகாலத்தில் சாக்ஷாத் பரமசிவனை நோக்கி கடுந்தவம் செய்தான். அப்பொழுது ஈசன் அவன்தவத்திற்கு மெச்சி அவன் முன்தோன்றி அவனுக்கு வேண்டும வரம் கேட்கவினவ, அவன் தன்னால் தொடப்படும் தலைகள் அனைவும் உடன் சாம்பலாய்ப் போகும்படி வரம் அருள வேண்டினன். உடன் ஈசனும் அவனுக்கு அங்ஙனமே வரம் அருள, அவன் அவர்தனக்கு செய்த நன்றியைமறந்து அவர் தலையையே தொடப்போனான்.

உடன் ஈசன் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவராய் அவனுக்கு விலகிஓட, அவனும் அவரைவிடாது பின் தொடர்ந்து ஓடினன். அப்பொழுது அதுகண்ட பகவான் ஸ்ரீமந்நாராயணர் அவனை சிக்ஷிக்க மோஹினி ரூபங்கொண்டு அவன் முன்தோன்றினர். அதுகண்ட பத்மாசுரன் சிவபெருமானை விட்டுவிட்டு அம்மோஹினி விஷ்ணுவை அணுகி தன்னை மணரும்படி அவரைக் கேட்டனன்.

அதற்கவர் இசைவதுபோல் பாவனைபண்ணி, அவனை ஸ்நானம்செய்துவரக்கூற, அவனும் அப்படியே குளித்து தலைதுவட்ட கையை தலைமேல் வைக்க பஸ்மமாயினன். அந்தோ இதில் பத்மன் இறந்தது அவ்ன் தனக்கு ஈசன்செய்த நன்றியை மறந்ததால் அல்லவா. ஆதலால் நாம் ஒருபோதும் நமக்குப் பிறர்செய்த நன்றியை மறக்கக்கூடாது

## 24. உற்றாரை உதாசினங்கள் சொல்லவேண்டாம்
### (இராவணனும் விபூஷணனும்)

முற்காலத்தில் லங்கையில் இராவணன் என்றோர் ராக்ஷஸ அரசன் இருந்தான். அவன் சகலவிதத்திலும் மகா கெட்டவனும் கொடியவனுமானவன். அவனுக்கு கும்பகர்ணன் விபூஷணன் என இருசகோதரர்கள் இருந்தார்கள். அவர்களில் விபூஷணன் மிக்க நல்லவன். நிற்க ஒருசமயம் இராவணன் பெண்ணாசை கொண்டு சாக்ஷாத் ஸ்ரீராமபிரானது தர்மபத்னியும லோகமாதாவுமான சீதாதேவியை அபகரித்தனன்.

அப்பொழுது ஸ்ரீராமருக்கும் ராவணனுக்கும் பெரும போர்ஏற்பட்டு ராக்ஷஸகுலமுழுதும் அழிந்து விடும்போல் காணப்பட்டது. அதுகண்ட விபூஷணர் சீதையை விட்டுவிடும்படி ராவணனை மிகவும் வேண்ட, அவன் மிகக கோபங்கொண்டு அதனை மறுத்து விபூஷணரைப் பலவாறு தூஷித்துக்கொல்லப் போனான். உடன் விபூஷணர் மிக்க வருத்தமுற்று அவனை விட்டகன்று ஸ்ரீராமபிரானை சரணமடைந்தனர்.

அப்பொழுது ஸ்ரீராமபிரானும் அவருக்கு அபயம் அளிக்க, அவர் அரக்கர்களின் பல சூழ்ச்சிகளையும் பலாபலங்களையும் அப்போதைக்கப்போது அவருக்குக் கூறி வந்தனர். ஆகவே முடிவில் ராவணாதிகள் அனைவரும் போரில் மாண்டனர். அந்தோ! இதில் ராவணன் தன் ரகஸியங்கள் வெளிப்பட்டு இறந்தது அவன் தம்பி விபூஷணரை உதாசினமாய்ப் பேசியதால் அல்லவா. ஆதலால் நாம நம் உற்றாரை ஒருபோதும் உதாசினங்கள் பேசக்கூடாது.

## 25 காணாத வார்த்தையைக் கட்டுரைக்க வேண்டாம்
### (இடைப்பையனும் புலியும்)

ஒருகாலத்தில் மதுரையில் கோபாலன் என்றோர் இடையன் இருந்தான். அவன் ஒருநாள் தன் மகனை அவன் வயலில் ஆடுகளை ஓட்டி சரியாய்மேய்த்து வரும படிக்கும், தான் பக்கத்து வயலில் கூலியாட்களுடன் வேலை செய்துகொண்டு இருப்பதாகவும், ஏதாவது துஷ்ட மிருகங்கள் வந்தால் தன்னைகூப்பிடும்படிக்கும் சொல்லிப் போனான்.

வேடிக்கை செய்வதிலேயே மிக்கப் பிரியங் கொண்ட அச்சிறுவன் ஒரு சமயம் கேலிக்காக பொய் யாய் புலிவருகிறது புலிவருகிறது எனக் கூவினன். அப் பொழுது அதுகேட்ட அவன் தகப்பனும் மற்றவர்களும் அங்கு ஓடிவர, புலி ஒன்றுங்காணாது பொய்யாகக்கூவி னான் என்றெண்ணி மனம் வருந்தி திரும்பிப் போய் விட்டார்கள். பின்னும் அவன் அவ்வாறு இரண்டு மூன்று தரம கூவி அவர்களை ஏமாற்றினன்.

கடைசியில் உண்மையாக புலி வர அவன் மிக்க கூக்குரலிட, எல்லோரும் அவன் பொய்யாக கூவுகிறான் என்றெண்ணி வராமல் இருந்து விட்டனர். அப்பொ ழுது புலி வயலில் புகுந்து சிறுவனை அடித்துச் சில ஆடுகளைத் தூக்கிக்கொண்டு போய்விட்டது. அந்தோ! இதில் சிறுவன் நன்கு புலியால் காயப்படுத்தப்பட்ட தும் சில ஆடுகளை இழந்ததும், அவன் பொய்யாக புலி புலி என முதலில் சில தடவை கூவினதால் அல்லவா. ஆதலால் நாம் ஒருபோதும் காணாத வார்த்தைகளைக் கண்டதுபோல் பொய்யாகக் கூறக்கூடாது.

## புண்படவே வார்த்தைதனைச் சொல்ல வேண்டாம்
## (துரியோதனனும் மைத்திரேயரும்)

முற்காலத்தில் அஸ்தினபுரியில் துரியோதனன் என்றோர் அரசன் இருந்தான். அவன் தன் தாயாதியான பாண்டவர்களுடன் சூதாடி வென்று, அவர்கள் ராஜ்பத்தைப் பிடுங்கிக்கொண்டு காட்டிற்குத் துரத்திவிட்டான். ஆகவே பாண்டவர்கள் அப்படியே வனத்தில் வசிக்கையில், அவர்களை பல பெரியோர்கள் வந்து பார்த்து வருந்திச் சென்றனர்.

அவர்களில் ஒருவரான மைத்திரேயமகரிஷி மிக்க வருத்தத்துடன் அஸ்தினபுரிக்குச் சென்று, துரியோதனனிடம் அவன் பாண்டவர்களை அக்கிரமமாக ராஜ்யத்தைப் பிடுங்கிகொண்டு வனத்திற்கு அனுப்பியது மகா கொடியதென்றும், அவர்கள் ஊண்உறக்கமின்றி மிக்க கஷ்டப்படுகினறனர் என்றும், கூறி அவனை அவர்களைத் திரும்ப நாட்டிற்கு அழைத்துக்கொள்ளச் சொன்னார்.

அதுகேட்ட துரியோதனன் அவரை நகைத்து எளனம்பண்ணி தொடைதட்டி தன் பராக்ரமத்தை பேசினான். [illegible]ன் அவர் கோபங்கொண்டு நீ பிற்காலத்தில் யுத்தத்தில் பீமனால் துடையில் மிதிக்கப்பட்டு சாவாய் என சாபமிட, அவனும் அப்படியே பின் போரில் இறந்தனன். அந்தோ! இதில் துரியோதனன் பீமனால் இறக்க சாபம் பெற்றது, அவன் மைத்திரேயரை மனம் வருந்தப் பேசியதால் அல்லவா. ஆதலால் நாம் ஒரு போதும் பிறர் வருந்தப் பேசக்கூடாது.

## 27. வாதாடி வழக்கழிவு சொல்ல வேண்டாம்
### (தனபதியின் தாயாதிகளின் கதை)

முற்காலத்தில் மதுரையில் சுந்தரேசபாதசேகரன் என்றோர் பாண்டியன் அரசாக்ஷிசெய்து வந்தான். அக்காலத்தில் அங்கு தனபதி என்றோர் தனவந்தன் இருந்தான். அவன் வெகுகாலமாய்ப் புத்திரப்பேறு இல்லாது தன் தங்கை பிள்ளையை ச்வீகாரம் செய்து கொண்டான்.

பின் சிலநாட்களுக்கெல்லாம் அவனுக்கும் அவன் தங்கைக்கும் பகைமை ஏற்பட, அவன் உலகாசையை வெறுத்து மறு பிறப்பிலாகிலும் புத்திரப்பேறு குறைவின்றிருக்க கருதி, தபஸுக்கு ஏகினன். அதுகண்ட அவன் தாயாதிபார் அவன மருமகனிடமிருந்த சொத்துக்கள் அனைத்தையும் பிடுங்கிக்கொண்டனர். உடன் அவன் தனக்கு ஒருவரும் உதவிக்கு இல்லாததுபற்றி ஈசனைப் பிரார்த்திக்க, அவர் அதனை அரசனிடம் கூறச் சொல்லினர்.

உடன் அவனும் அப்படியே செய்ய, அங்கு ஈசன் அவன்பால் தனபதிபோல் தோன்றி சாக்ஷியம் கூறி மறைந்தனர். அப்பொழுது அதுகண்ட அரசன் தனபதியின் தாயாதிகளை சிக்ஷித்து, அவர்களிடம் இருந்த சொத்துக்களை மீண்டும் அவன் மருமகனிடம் வாங்கிக் கொடுத்தனன். அந்தோ இதில் தனபதியின் தாயாதிகள் சிக்ஷைபெற்றது, அவர்கள் கள்ளவழக்கு செய்ததால் அல்லவா. ஆதலால் நாம் ஒருபோதும் கள்ள வழக்குப் பேசக்கூடாது.

## 28 திறம்பேசிக் கலகமிட்டுத் திரிய வேண்டாம்

### (கிரவுஞ்சனும் அகஸ்திய மகரிஷியும்)

முற்காலத்தில் மேருமலையில் வீற்றிருந்த சாக்ஷாத் சிவபெருமானிடம் அகஸ்தியர் என்றோர் மகரிஷி இருந்தார். அவர் ஒரு சமயம் ஈசனார் ஆக்ஞைப்படி விந்திய மலையின் செருக்கை அடக்கும் பொருட்டும் தக்ஷணத்திலிருந்த ஜலப்பஞ்சத்தை நீக்கும் பொருட்டும பொதியமலையை நோக்கி புறப்பட்டனர். அப்பொழுது வழியில் அவருக்கு தாரகன் எனும் ஓர் கொடிய அரசன நகரமான மாயாபுரியைக் கடக்க நேர்ந்தது.

ஆகவே அவர் அங்குவர, தாரகாசுரனது ஏவலாளனும் மகா கொடியோனும் ஓர் பெரும்மாயாவியும் சதா பல சாதுக்களையும் சண்டைக்கிழுத்து கொன்று தின்கிறவனுமான கிரவுஞ்சன் என்றோர் அரக்கன் அவரைச் சந்தித்தான். உடன் அவன் ஓர் பெரிய மலைபோல் பாதையில் நின்று அவரை வழிமறித்து வாதுக்கிழுத்து விழுங்கினன்.

அதுகண்ட அம்முனிவர் தம் கையிலிருந்த தண்டத்தால் அவனை ஓர் குத்துகுத்தி இருத்தி சதா அங்கு ஓர் மலையாகவே இருக்கும்படி சபித்துப் போயினர். அந்தோ! இதில் கிரவுஞ்சன் மனித உருவமிழந்து மலை உருவம் பெற்றது, அவன் அகஸ்திய முனிவருடன் தன் திறத்தைப்பேசிக் கலகமிட்டதால் அல்லவா. ஆகலால் நாம் ஒருபோதும் பிறரிடம் நம் திறத்தைப்பேசிக் கலகமிட்டுத் திரியக் கூடாது.

## 29 தெய்வத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்
### (அர்ச்சுனனும் அனுமாரும்)

முற்காலத்தில் அஸ்தினபுரியில் ஸ்ரீகிருஷ்ண பக வானிடம் மிகுந்த பக்தியுள்ளவனான அர்ச்சுனன் என் றோர் வீரன் இருந்தான். அவன் ஒரு சமயம் தீர்த்த யாத்திரையாகி பலவிடங்கள் தரிசித்துக்கொண்டு கடைசியாய் சேதுவுக்கு வந்தனன். அப்பொழுது அவன் அங்கு தபஸ் செய்துகொண்டிருந்த வானர சிரேஷ்டரும் மிகக பலசாலியும் ஸ்ரீராமனிடம் அத்யந்த பக்தி நிறயபியவருமான ஹனுமாரைச் சந்தித்தனர்.

பின் அவ்விருவரும் யோகக்ஷேமங்கள் விசாரித்து பல விஷயங்கள் பேசிவருகையில், தான் தானே பெரி யவன் என அவர்களுக்குள் விவாதமுண்டாயிற்று. உடன் அவர்கள் தோற்றவன் அக்கினிப்பிரவேசம் செய்தல் எனும் பந்தயம வைத்து சேதுப்பாலத்தைக் கட்டி உடைப்பதில் தம்பலங்களைக் காட்ட முயன் றனர். அதில் ஹனுமார் பகவானை நினைத்துப் பாலத்தை உடைக்கப் போய் ஜெயிக்க, அர்ச்சுனன் பகவானை மறந்து தன் பலத்தை நினைத்து பாலத்தை உடைக்கப் போய் தோற்றனன்.

உடன் அவன் தன் சபதப்படி தீக்குழி பாயப் போகும் சமயம் ஸ்ரீகிருஷ்ணன் அவனுக்குத் தன் ஞாபகத்தை நினைவூட்டிட, அவன் அப்பாலத்தை மீண் டும் உடைக்க முயன்று வெகு சுலபமாய்த் தகர்த்து விட்டனன். அந்தோ! இதில் அர்ச்சுனன் முதலில் தோற்றது அவன் பகவானை மறந்ததால் அல்லவா. ஆதலால் நாம் ஒரு போதும் கடவுளை மறக்கக்கூடாது.

## 30. இறந்தாலும் பொய்தனைச் சொல்லவேண்டாம்

(தர்மர் பொய்கூறி இழிவுற்றது)

முற்காலத்தில் அஸ்தினபுரியில் இருந்த துரியோதனாதிகளுக்கும் பாண்டவர்களுக்கும் ராஜ்யம் பங்கிடுவதில் போர் ஏற்பட, ஒருநாள் அவர்கள் குருவான துரோணர் துரியோதனன்பால் பாண்டவர்களை எதிர்த்தனர். அதுகண்ட பாண்டவரில் இளைய வனான வீமன் அவரை தந்திரமாய்க் கொல்ல எண்ணி, மாளவநாட்டரசனது குதிரையான அச்வத்தாமனைக் கொன்றுவிட்டு, அவரிடம் வந்து அவர்பிள்ளை அச்வத்தாமன் இறந்தான் எனக் கூறினான்.

உடன் அவர் அதன் உண்மையை அறிய பாண்டவரில் மூத்தவரும் மகா சத்தியசந்தருமான தர்மரைக் கேட்க, அதற்கு ஸ்ரீ கிருஷ்ண பகவான் அவரை ஆம் என சொல்லும்படி கூறினர். அதற்கவர் மனமில்லாது வருந்த. பகவான் அதுபொய்யாகாது என்பதற்கு பல நியாயங்கள் கூறி, அவரை அதை ஒப்புக்கொள்ளக் கூறினர். உடன் அவரும் அதற்கிசைந்து அப்படியே கூற, அவரது ரதம் அதுவரை பூமிக்குமேல் நாலு விரல் உயரத்தில் ஓடியதுபோய் பூமியைத் தொடலா யிற்று.

மேலும் அவர் பிற்காலத்தில் மோக்ஷம் செல்லுங்கால் சிறிதுகாலம் நரகத்தில் வசித்துப்போகவும் ஏற்பட்டது. அந்தோ இதில் தர்மர் ரதம் பூமிக்குமேல் ஓடியது போய் பூமியைத்தொட நேர்ந்ததும், அவர் நரகம் பார்த்துப்போக நேர்ந்ததும் அவர் இறந்து விடப்போகிறோமே என்றெண்ணி, பொய் பேசியதால் அல்லவா. ஆதலால் நாம் இறக்க நேரிட்டபொழுதும் கூட பொய் பேசக்கூடாது.

# விளம்பரம்.

## மாதிரி காப்பி பாதி விலை.

### T. A. எக்ஞமய்யரால் இயற்றப்பட்ட புஸ்தகங்கள்

### விற்பனைக்குத் தயார்.

| | | | |
|---|---|---|---|
| 1 | விவிக்ஸ் (இராஜாங்க நூல்) | | அணா |
| 2 | கதையும் அபிநயப் பாட்டும் | ... | |
| 3 | பிஸியாலஜியும் ஹைஜினும் | ... | [illegible] |
| 4 | ஸயன்ஸ் (பிஸிக்ஸூம் கிமிஸ்டிரியும்) | ... | [illegible] |
| 5 | மகிபதி மகிமை (ஜியார்ஜ் அரசாது) | ... | 2 |
| 6 | இயற்கையறிவு | ... | 4 |
| 7 | டிராயிங் புக் | ... | 4 |
| 8 | இ. த. வக்கபிலேரி (தமிழ் உச்சரிப்புள்ளது) | ... | 3 |
| 9 | கரிகுலமும் டயம் டேபிளும் (5ம் வகுப்புமுடிய) | ... | 3 |
| 10 | உபாத்திமை சங்கத்தின் ரசீது புக் | ... | 3 |
| 11 | 1-ம் 2-ம் வகுப்பு கணக்கு அப்பியாசம் | ... | 3 |
| 12 | 3–ம் வகுப்பு கணக்கு அப்பியாசம் | ... | 3 |
| 13 | 1-ம் 2–ம் வகுப்பு பொது அறிவு | ... | 3 |
| 14 | 3-ம் வகுப்பு பொது அறிவு | ... | 3 |
| 15 | 4-ம் வகுப்பு தமிழ் இலக்கண வினாவிடை | ... | 1 |
| 16 | 5-ம் வகுப்பு தமிழ் இலக்கண வினாவிடை | ... | 2 |
| 17 | 5–ம் 6-ம் வகுப்பு இங்கிலீஷ் இலக்கணம் (தமிழில்) | | 3 |
| 18 | இங்கிலீஷ் தமிழ் நவீன பிரதம பாடம் | ... | 4 |
| 19 | வெற்றி வேற்கை (அர்த்தத்துடன்) | ... | 1 |
| 20 | ஆத்திசூடி (அர்த்தத்துடன்) ஷை டசன் | ... | 6 |
| 21 | கொன்றைவேந்தன் ஷை | ... | 6 |
| 22 | உலக நீதி ஷை ஷை | ... | 6 |
| 23 | ஆத்திசூடி நீதிக்கதைகள் | ... | 2 |
| 24 | உலக நீதி ஷை | .... | 2 |
| 25 | கொன்றைவேந்தன் ஷை | ... | 2 |
| 26 | வெற்றிவேற்கை ஷை | .... | 2 |

கமிஷன்

ரூ 5-வரை ரூ. 1-க்கு 4 அணா மேல் 6 அணா

தபாற் கூலி வேறு,

T. A. எக்ஞமய்யர் புக் டிப்போ, திருநெல்வேலி